பத்திரிக்கைச் செய்தி

முறைகேடு வழக்கில் இளநிலை உதவியாளர் மற்றும் தனியார் பள்ளி முதல்வர் ஆகியோர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

விழுப்புரம் மாவட்டம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை விழுப்புரம் பிரிவு வழக்கு எண்.03/2014/AC/VPM, Spl C.C No.05/2018 Rc.No.91/2014/ADW/VPM முறைகேடு வழக்கில் முதல் எதிரி திரு.ராதாகிருஷ்ணன், முன்னால் இளநிலை உதவியாளர், மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் மற்றும் மூன்றாம் எதிரி திரு. பூமிநாதன், தனியார் பள்ளி முதல்வர் ஆகியோர்களுக்கு விழுப்புரம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான நீதிமன்றத்தில் 29.04.2026 அன்று குற்றவாளி என தீர்மானித்து வழக்கின் முதல் எதிரிக்கு 2 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.10,000/- அபராதமும் விதித்து மூன்றாம் எதிரிக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மற்றும் ரூ.10,000/- அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கின் இரண்டாம் எதிரி இறந்துவிட்டார்.